குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.சர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி. எண்.216/2018

அ.சா.7

2023–ம் ஆண்டு அக்டோபர் 04–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 7–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.அன்பழகன் | ஜாதி | |
| தந்தை பெயர் | பெரியகவுண்டர் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 12.59 மணி,

A2(Thamaraiselvan) A3(Narayanan), A4(Karthickraja) Present. A1(Chinnathangam) died and charge abated. Advocate Mr.P.Kathiravan present for accused. . APP Mr.Suresh Present.

**முதல் விசாரணை.**

**1.** நான் எல்லாயூரில் குடியிருந்து கொண்டு தோங்காய் வியபாரம் செய்கிறேன். அ.சா.1,2 மற்றும் எதிரிகளை தெரியும். அ.சா.1,2 மற்றும் எதிரிகளுக்கிடைய என்ன பிரச்சினை என்று தெரியாது. ஒருநாள் போலீசார் எங்கள் ஊருக்கு வந்து ஏழுமலை திருப்பதி சென்று விட்டார் என்றும், அவர் அன்றைய தினம் ஊரில் இல்லை என்பதற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

2. எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 21.10.2017–ம் தேதி 15.00 மணியளவில் அ.சா.1 னின் வீட்டின் முன்பாக வைத்து ஆஜர்

எதிரிகள் அனைவரும் அ.சா.1 னை கெட்டவார்த்தையால் திட்டினார்கள் என்றும், 1,2 எதிரிகள் இருவரும் அ.சா.1 னை கையால் அடித்து குத்தினார்கள் என்றும், அதை தடுக்க வந்த அ.சா.2 யை 3,4 எதிரிகள் இருவரும் கையால் குத்தினார்கள் என்றும், எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1,2 யை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**. இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: காலை 01.05 மணி,

சாட்சி.அன்பழகன்

ஓம்/-S.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.